13782

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations Sri Lanka

**42 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Ord. Level) Examination, 2021(2022)

| | |
|---|---|
| කර්ණාටක සංගීතය I, II | පැය තුනයි |
| கர்நாடக சங்கீதம் I, II | மூன்று மணித்தியாலங்கள் |
| Carnatic Music I, II | Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கர்நாடக சங்கீதம் I

**அறிவுறுத்தல்கள் :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** தெலுங்குப் பதங்களால் பெரும்பாலும் போற்றப்படும் தெய்வம்
(1) முருகன் (2) சிவன்
(3) கிருஷ்ணன் (4) சக்தி

**2.** அப்பியாசகானம், சபாகானம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான உருப்படி
(1) வர்ணம் (2) கீதம் (3) ஜதீஸ்வரம் (4) தில்லானா

**3.** திருவிசைப்பா பாடப்படும் இராகம்
(1) மத்தியமாவதி (2) ஆனந்தபைரவி (3) சங்கராபரணம் (4) பூபாளம்

**4.** வீணையின் தாளத் தந்திகளுள் ஒன்று,
(1) ஹெச்சு ஸாரணி (2) ஸாரணி (3) மந்தரம் (4) அனுமந்திரம்

**5.** பின்வரும் அங்கங்களுள் வர்ணம், பதம் இரண்டிற்கும் பொது அல்லாத அங்கம்
(1) பல்லவி (2) அனுபல்லவி
(3) சரணம் (4) முக்தாயிஸ்வரம்

**6.** ஹிந்துஸ்தானி இசையில் "கமாஜ்தாட்" எனப்படும் இராகம்
(1) ஹரிகாம்போஜி (2) சங்கராபரணம்
(3) கரஹரப்பிரியா (4) தோடி

**7.** புல்லாங்குழல் ஒரு
(1) கனவாத்தியம் (2) ததவாத்தியம்
(3) ஏகத்வனி வாத்தியம் (4) பஹுத்வனி வாத்தியம்

**8.** ஹிந்துஸ்தானி இசையில் காபி என வழங்கப்படும் இராகம்
(1) கரஹரப்ரியா (2) மோகனம் (3) பந்துவராளி (4) மத்தியமாவதி

**9.** "உற்றுமை சேர்வது........." என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்
(1) திருவீழிமிழலை (2) திருவாலவாய்
(3) திருப்பிரமபுரம் (4) திருவாவினன்குடி

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**10.** “ஸ்ரீ ராஜராஜேஸ்வரி” என்னும் கீர்த்தனையை இயற்றியவர்
(1) சுப்பிரமணிய பாரதியார் (2) ஸ்ரீமதி நீலா இராமமூர்த்தி
(3) மதுரை முரளீதரன் (4) ஊத்துக்காடு வெங்கடசுப்பய்யர்

**11.** பிரசித்தமான கனபஞ்சக ராகங்களில் ஒன்று
(1) தோடி (2) ஆபோஹி (3) ஆரபி (4) சங்கராபரணம்

**12.** வேத சக்கரத்தின் நேர் பிரதிமத்யம இராகங்களின் மேள எண்கள்
(1) 46 - 48 (2) 49 - 54 (3) 55 - 60 (4) 67 - 72

**13.** பதாநீஸா;, தநீ;தபாமகம..... என்னும் ஸ்வரஸஞ்சாரத்தில் வரும் அட்சரங்களின் மொத்த எண்ணிக்கை
(1) 19 (2) 20 (3) 21 (4) 22

**14.** மதுரபாவத்தினை அதிகமாக வெளிப்படுத்தும் உருப்படி
(1) ஜாவளி (2) பதம் (3) தில்லானா (4) ஜதீஸ்வரம்

**15.** பண்வகைகளுள் திறம் எனக் குறிப்பிடப்படுவது
(1) ஜனக இராகம் (2) ஸ்வராந்தர இராகம்
(3) ஷாடவ இராகம் (4) ஔடவ இராகம்

**16.** உருப்படிகளில் “குருகுஹ” என்னும் முத்திரையைக் கையாண்டவர்
(1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) தியாகராஜ சுவாமிகள்
(3) சியாமா சாஸ்திரிகள் (4) புரந்தரதாஸர்

**17.** மிருதங்கம், தவில் ஆகிய வாத்தியங்களில் இடந்தலைப் பாகத்திற்கு வழங்கப்பெறும் பெயர்
(1) கரணை (2) தொப்பி (3) கொட்டுத்தட்டு (4) மீட்டுத்தோல்

**18.** $1_4 4 0 0, 1_5 U O$ இவ்விரு தாளங்களின் மொத்த அட்சர எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும் தாளம்
(1) சங்கீர்ணஜாதி திரிபுடைதாளம் (2) மிஸ்ரஜாதி மட்டியதாளம்
(3) சங்கீர்ணஜாதி அடதாளம் (4) சங்கீர்ணஜாதி மட்டியதாளம்

**19.** பின்வருவனவற்றுள் சங்கீர்ணசாபு தாளத்திற்கு உரிய ஜதி
(1) தகிட தக தகிட (2) தகதிமி தகிட தகிட
(3) தகிட தகதிமி தகிட (4) தகதிமி தக தகிட

**20.** ஸரபநந்தன தாளத்தில் பல்லவி பாடியவர்
(1) சியாமா சாஸ்திரிகள் (2) தியாகராஜர்
(3) திரிகூட இராசப்பக்கவிராயர் (4) கனம் கிருஷ்ணய்யர்

**21.** தோடியின் தைவதத்தை ஸட்ஜமாக வைத்துக் கொண்டால் தோன்றும் இராகம்
(1) கரஹரப்ரியா (2) சங்கராபரணம்
(3) கல்யாணி (4) ஹரிகாம்போஜி

**22.** “விரிபோணி” என்ற பைரவி இராக அடதாள வர்ணத்தை இயற்றியவர்
(1) பச்சிமிரியம் ஆதியப்பய்யர் (2) ராமாமாத்தியர்
(3) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் (4) அருணாச்சலகவிராயர்

**23.** ஒரு இராகத்தின் ஸ்வரப் பிரயோகங்களில் நட்சத்திரக் குறியீடு (✳) பயன்படுத்தப்பட்டிருப்பின் அவ் இராகம்,
(1) ஜனக இராகம் (2) உபாங்க இராகம்
(3) வக்ர இராகம் (4) பாஷாங்க இராகம்

**24.** “தனதான தந்தனத் தனதான” எனும் சந்தத்திற்குப் பொருத்தமான திருப்புகழ்
(1) பாதிமதிநதி போதும் அணிசடை (2) அபகார நிந்தைபட் டுழலாதே
(3) ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே (4) பக்தியால் யானுனைப் பலகாலும்

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**25.** பின்வருவனவற்றுள் இராகமாலிகை உருப்படிகள்
(1) ஆரபிமானம், நித்ய கல்யாணி
(2) பாவயாமி, இனிநமக்கொரு
(3) பன்னகேந்ர சயன, ஸாமி உன்னை சதா
(4) ஸ்ரீ ராஜராஜேஸ்வரி, அள்ளி உண்டிடலாம்

**26.** சங்கிரக சூடாமணி என்னும் சமஸ்கிருத நூலை இயற்றியவர்
(1) கோவிந்தாச்சாரியார்
(2) வேங்கடமகி
(3) ஹரிபாலர்
(4) ராமாமாத்தியர்

**27.** "சாந்துப் பொட்டு தளதளென்ன" என்ற கண்ணி இடம்பெறும் பாடல்
(1) ஞானக்கும்மி
(2) ஞானச்சிந்து
(3) லாலி
(4) சிதம்பரக் கும்மி

**28.** பின்வருவனவற்றுள் அதீத எடுப்பில் அமைந்த உருப்படி,
(1) "மயில்வாகனா..." - மோகனம் - ஆதி
(2) "சிவகாம சுந்தரி..." - முகாரி - ஆதி
(3) "உன்னையல்லால்..." - சிம்மேந்திரமத்யமம் - ஆதி
(4) "ஆடும் கலாப மயில்..." - கல்யாணி - ஆதி

**29.** தமிழில் கனராக பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றிய வாக்கேயகாரர்
(1) கோபாலகிருஷ்ண பாரதியார்
(2) பாபநாசம் சிவன்
(3) முத்துத்தாண்டவர்
(4) சுத்தானந்த பாரதியார்

**30.** "பண்டுநால்வருக்கு..." எனும் தேவாரம் அமைந்துள்ள பண்ணிற்கு இணையான இராகம்,
(1) மத்தியமாவதி (2) சங்கராபரணம் (3) பந்துவராளி (4) நவரோஜ்

**31.** திருப்பாம்புரம் நடராஜசுந்தரம்பிள்ளை என்பவரால் வாசித்துப் பிரபல்யம் பெற்ற வாத்தியம்
(1) புல்லாங்குழல் (2) வீணை (3) வயலின் (4) நாதஸ்வரம்

**32.** மத்தியமாவதி இராகத்தில் கண்டஜாதி அடதாள அலங்காரம் அமைக்கும்போது வரும் முதலாவது ஆவர்த்தனம்
(1) ஸரீகா | ஸாரிகா | பா | பா ||
(2) ஸரீமா | ஸாரிமா | பா | பா ||
(3) ஸரீகா | ஸாரிகா | மா | மா ||
(4) ஸரீபா | ஸாரிபா | மா | மா ||

**33.** பதநிஸரிகமப - மகரிஸநிதப என்னும் ஆரோஹண அவரோஹணங்களையுடைய இராகம்
(1) தைவதாந்திய இராகம்
(2) பஞ்சமாந்திய இராகம்
(3) நிஷாதாந்திய இராகம்
(4) பாஷாங்க இராகம்

**34.** பின்வருவனவற்றுள் ஹிந்துஸ்தானி இசைநிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்
(1) வீணை, ஸாரங்கி, வயலின்
(2) கடம், சித்தார், முகர்சிங்
(3) ஸாரங்கி, ஷெனாய், சித்தார்
(4) கிற்றார், வயலின், ஷெனாய்

**35.** பின்வருவனவற்றுள் சங்கராபரண இராகத்தில் அமைந்த சஞ்சாரம்,
(1) ரிமரிபா, மரிஸ நிஸாரீ
(2) ரிபமகரீ, மபாதஸ் ரீஸ்நித
(3) கபதஸா, தாபக பரிகபா
(4) பமகரி கமபா, தநிஸ்நித

**36.** வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில்
(1) பிரதான பாடகர் பாட ஏனையோர் கதை சொல்லி வாத்தியங்களை வாசிப்பர்.
(2) பிரதான பாடகர் வில்லினைத் தட்டி பாடலுடன் கூடிய கதையினைச் சொல்ல ஏனையோர் வாத்தியங்களை வாசித்துப் பிற்பாட்டுப் பாடுவர்.
(3) பிரதான பாடகர் பாட ஏனையோர் வில்லினைத் தட்டுவர்.
(4) பிரதான பாடகர் மட்டும் பாட ஏனையோர் வாத்தியங்களை வாசிப்பர்.

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/